ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ நண்ணாத ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ‖ நண்ணாத ‖

## திருக்கடல்மல்லை - 2

‡நண்ணாத வாள் அவுணர்⋆ இடைப் புக்கு⋆ வானவரைப்
பெண்ணாகி⋆ அமுதூட்டும் பெருமானார்⋆ மருவினிய
தண்ணார்ந்த கடல் மல்லைத்⋆ தல சயனத்துறைவாரை⋆
எண்ணாதே இருப்பாரை⋆ இறைப் பொழுதும் எண்ணோமே (1)

பார் வண்ண மட மங்கை⋆ பனி நல் மா மலர்க் கிழத்தி⋆
நீர் வண்ணன் மார்வத்தில்⋆ இருக்கையை முன் நினைந்தவன் ஊர்⋆
கார்வண்ண முது முந்நீர்க்⋆ கடல் மல்லைத் தல சயனம்⋆
ஆர் எண்ணும் நெஞ்சுடையார்⋆ அவர் எம்மை ஆள்வாரே (2)

ஏனத்தின் உருவாகி⋆ நில மங்கை எழில் கொண்டான்⋆
வானத்தில் அவர் முறையால்⋆ மகிழ்ந்தேத்தி வலம் கொள்ள⋆
கானத்தின் கடல் மல்லைத்⋆ தல சயனத்துறைகின்ற⋆
ஞானத்தின் ஒளி உருவை⋆ நினைவார் என் நாயகரே (3)

விண்டாரை வென்றாவி⋆ விலங்குண்ண மெல் இயலார்⋆
கொண்டாடும் மல் அகலம்⋆ அழல் ஏற வெம் சமத்துக்⋆
கண்டாரை கடல் மல்லைத்⋆ தல சயனத்துறைவாரைக்
கொண்டாடும் நெஞ்சுடையார்⋆ அவர் எங்கள் குல தெய்வமே (4)

பிச்சச் சிறு பீலிச்⋆ சமண் குண்டர் முதலாயோர்⋆
விச்சைக்கிறை என்னும்⋆ அவ்விறையைப் பணியாதே⋆
கச்சிக் கிடந்தவன் ஊர்⋆ கடல் மல்லைத் தல சயனம்⋆
நச்சித் தொழுவாரை⋆ நச்சென்றன் நல் நெஞ்சே! (5)

புலன் கொள் நிதிக் குவையோடு⋆ புழைக் கை மா களிற்றினமும்⋆
நலம் கொள் நவமணிக் குவையும்⋆ சுமந்தெங்கும் நான்றொசிந்து⋆
கலங்கள் இயங்கும் மல்லைக்⋆ கடல் மல்லைத் தல சயனம்⋆
வலங்கொள் மனத்தார் அவரை⋆ வலங்கொள் என் மட நெஞ்சே! (6)

பஞ்சிச் சிறு கூழை⋆ உருவாகி மருவாத⋆
வஞ்சப் பெண் நஞ்சுண்ட⋆ அண்ணல் முன் நண்ணாத⋆
கஞ்சைக் கடந்தவன் ஊர்⋆ கடல் மல்லைத் தல சயனம்⋆
நெஞ்சில் தொழுவாரைத்⋆ தொழுவாய் என் தூய் நெஞ்சே! (7)

செழு நீர் மலர்க் கமலம்⋆ திரை உந்த வன் பகட்டால்⋆
உழு நீர் வயல் உழவர் உழ⋆ பின் முன் பிழைத்தெழுந்த⋆
கழு நீர் கடி கமழும்⋆ கடல் மல்லைத் தல சயனம்⋆
தொழு நீர் மனத்தவரைத்⋆ தொழுவாய் என் தூய் நெஞ்சே (8)

பிணங்கள் இடு காடதனுள்⋆ நடமாடு பிஞ்ஞகனோடு⋆
இணங்கு திருச் சக்கரத்து⋆ எம் பெருமானார்க்கிடம்⋆ விசும்பில்
கணங்கள் இயங்கும் மல்லைக்⋆ கடல் மல்லைத் தல சயனம்⋆
வணங்கும் மனத்தார் அவரை⋆ வணங்கென்றன் மட நெஞ்சே (9)

‡கடி கமழு நெடு மறுகில்⋆ கடல் மல்லைத் தல சயனத்து⋆
அடிகள் அடியே நினையும்⋆ அடியவர்கள் தம் அடியான்⋆
வடி கொள் நெடு வேல் வலவன்⋆ கலிகன்றி ஒலி வல்லார்⋆
முடி கொள் நெடு மன்னவர் தம்⋆ முதல்வர் முதல் ஆவாரே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥